பக்கங்கள் 13+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 18 சனிக்கிழமை 07.11.2024 | அதிர்வு 128

## யாழில் மாவீரர் நினைவேந்தல்: மேலும் இருவரிடம் விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மாவீரர் வார நிகழ்வுகளை முன்னெடுத்தமை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அநுரவின் வேலைத்திட்டத்துக்கு அமெரிக்கா பூரண ஒத்துழைப்பு

## அந்நாட்டுப் பிரதிநிதிகள் நேரில் தெரிவிப்பு

**தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்கள், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச முகவர் அமைப்பு மற்றும் அமெரிக்காவின் திறைசேரி துறை ஆகியவற்றின் அமெரிக்கப் பிரதிநிதிகள் இன்று சனிக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்தனர்.**

02



# யாழில் 300 பவுண் நகைகளைத் திருடிய பிரதான சந்தேகநபர் கொழும்பில் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் 300 பவுண் நகைகளைத் திருடிய சம்பவம் தொடர்பில் நீண்டகாலமாகத் தேடப்பட்ட பிரதான சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது பெருமளவு நகைகள், ஆவணங்கள், திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கைக்குண்டு என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளில் கடந்த இரண்டு வருடங்களாகச் சைக்கிளில் முகத்தை மறைத்துச்சென்று நூதனமாக நகைகளைத் திருடும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





### அநுரவின்...

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, தற்போதைய அரசின் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும், இலங்கைக்கு வெளியில் கொண்டு செல்லப்பட்டுள்ள பணத்தை நாட்டுக்கு மீண்டும் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெற்கு மற்றும் மத்திய ஆசிய அலுவல்கள் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் உதவிச் இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்க அரசு தயாராக இருப்பதாகவும் உதவி இராஜாங்க செயலாளர் தெரிவித்தார்.

அரசியல், பொருளாதார மற்றும் சமூக விடயங்கள் தொடர்பில் முக்கியத்துவத்தை அறிந்துகொண்டு புதிய அரசு கொண்டு செல்லும் வேலைத்திட்டத்துக்கு அமெரிக்க அரசின் பாராட்டுக்களையும் அவர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையில் ஊழல் மற்றும் வீண் விரயம் தொடர்பில் அரசியல் கலசாரம் நேரடியாக தாக்கம் செலுத்துவதாகவும், புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கி ஊழலையும் வீண் விரயத்தையும் மட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும், புதிய தொழில்நுட்பத்தை அரச துறையில் அறிமுகப்படுத்தி தரமான அரச சேவையை உருவாக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரொஷான் கமகே, இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் ஜூலி சங், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச முகவர் அமைப்பின் ஆசியாவுக்கான பிரதி உதவி நிர்வாகி அஞ்சலி கவூர், ஐக்கிய அமெரிக்காவின் திறைசேரி திணைக்களத்தின் ஆசிய மற்றும் பசுபிக் வலயங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரொபர்ட் கப்ரொத், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச முகவர் அமைப்பின் தூதுக்குழுவின் பணிப்பாளர் கேப்ரியல் க்ராவ், அரசியல் மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஆலோசகர் ஷோன் கிரே ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

### யாழில் மாவீரர்...

மாவீரர் வார காலப் பகுதியில் கொக்குவில் சிவசுப்பிரமணியர் முருகன் கோவிலடியில் மாவீரர்களை நினைவேந்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டு இளைஞர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்த தினம் மற்றும் மாவீரர் நாள் குறித்து முகநூலில் பதிவிட்டமை தொடர்பில் கடந்த 29ஆம் திகதி இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

அதேவேளை, வல்வெட்டித்துறைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்த தினம் கொண்டாடியமை தொடர்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட 6 பேரிடம் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### யாழில் 300 பவுண்...

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் நீண்ட காலமாகத் தேடப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர் கொழும்பில் தலைமறைவாக இருந்தபோது இந்திக்க தலைமையிலான யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். இதன்போது சந்தேகநபரின் மனைவி அங்கிருந்து தப்பியோடினார்.

சந்தேகநபரிடம் இருந்து 90 பவுண் நகைகள் மீட்கப்பட்டதுடன், திருடிய நகைகளை விற்ற பணத்தில் சந்தேகநபர் கொழும்பில் சொகுசு வீடொன்றை அமைத்தமையும் பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட நகைகளை வாங்கிய கொழும்பைச் சேர்ந்த மூன்று பேரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பிரதான சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# கற்கோவளம் இராணுவ முகாமில் இருந்து இன்னமும் வெளியேறவில்லை படையினர்

## காற்றில் பறந்தது உத்தரவு

யாழ். வடமராட்சி, பருத்தித்துறை – கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமிம் இருந்து இராணுவத்தினரை வெளியேறுமாறு இராணுவத் தலைமையகத்தால் உத்தரவிடப்பட்ட போதிலும், இன்னமும் இராணுவத்தினர் வெளியேறவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அமைச்சரவை கடந்த மாதம் 18ஆம் திகதி பொறுப்பேற்றிருந்தது. அமைச்சரவை பொறுப்பேற்று சில மணி நேரங்களில், பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து 14 நாள்களுக்குள் படையினர் வெளியேற வேண்டும் என்ற உத்தரவு இராணுவத் தலைமையகத்தால் பிறப்பிக்கப்பட்டது.

எனினும், 14 நாள்களுக்கு மேலாகியும், இந்த முகாம் இராணுவத்தினரின் பிடியில் இருந்து விடுவிக்கப்படவில்லை. தொடர்ந்தும் அந்தத் தனியார் காணியும், இராணுவ முகாமும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

எனவே, வாக்குறுதி வழங்கி மக்களை ஏமாற்றாது, அங்கிருந்து படையினர் உடனடியாக வெளியேற வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குறித்த இராணுவ முகாமை அகற்றுமாறும், இராணுவத்தை வெளியேறுமாறும் மக்களும், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் கடந்த காலங்களில் பல கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருந்தனர். குறித்த காணியை ஆக்கிரமிக்கும் வகையில் நில அளவீடு செய்வதற்குப் பல தடவைகள் முயற்சிகள் செய்யப்பட்டிருந்த போதிலும் மக்களின் எதிர்ப்பால் அந்தப் பணிகள் தடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# புலிகள் அமைப்பின் சின்னங்களுடன் நினைவேந்தியிருந்தால் நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கொடியான புலிக்கொடி மற்றும் புலிகள் அமைப்புக்குரிய சின்னங்களுடன் நினைவேந்தல் நடத்தப்பட்டிருந்தால், உரிய விசாரணைகளின் பின்னர் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. புத்திக மனதுங்க தெரிவித்தார்.

மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புலிகள் அமைப்பின் கொடி மற்றும் அடையாளங்களுடன் நினைவேந்தல் நடத்த முடியாது. சட்டத்தில் அதற்கு இடமில்லை. அவ்வாறு நடந்திருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இனவாதத்துக்கும், தீவிரவாதத்துக்கும் இடமில்லை." – என்றார்.



# புதிய கூட்டணிக்கு முயற்சிக்கும் விமல்

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் அரசியலுக்குத் தற்காலிகமாக விடைகொடுத்திருந்த விமல் வீரவன்ச, புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன எனவும், தேசிய சுதந்திர முன்னணி தலைமையிலேயே கூட்டணி அமையவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

தேசியவாதிகள் மற்றும் இடதுசாரித் தலைவர்களைக் கூட்டணிக்குள் உள்வாங்குவதற்கும், "இலங்கையர்கள்" என்ற கொள்கையுடன் கூட்டணிப் பயணத்தைத் தொடர்வதற்கும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.


# பொல்லால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் படுகொலை

பொல்லால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், வாரியப்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்வெஹெர பிரதேசத்தில் நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் வாரியப்பொல, தெமட்டலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய நபராவார்.

மேற்படி நபர் இளைஞர் ஒருவருடன் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த




நிலையில் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறு எல்லை மீறியதில் குறித்த இளைஞர், மேற்படி நபரைப் பொல்லால் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

இதையடுத்து சந்தேகநபரான 30 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மீண்டும் கைதான லொஹான் ரத்வத்தே விளக்கமறியலில்!



மீண்டும் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தேவை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக லொஹான் ரத்வத்தே மற்றும் அவரது மனைவி ஆகியோர் பதிவு செய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அதனையடுத்து மீண்டும் நேற்று மதுபோதையில் வாகனம் ஓட்டியதால் ஏற்பட்ட விபத்தொன்று தொடர்பாக கொள்ளுப்பிட்டியில் வைத்து லொஹான் ரத்வத்தே கைது செய்யப்பட்டார்.

இந்நிலையிலேயே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கால்வாயில் இருந்து ஆணின் சடலம் மீட்பு!

கால்வாயில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, பலாங்கொடை, கிரிந்திகல பிரதேசத்தில் உள்ள சிறிய கால்வாய் ஒன்றில் இருந்து மேற்படி சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது என்று பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் தொடர்ந்து நான்கு நாள்கள் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தில் மழைக்குப் பின்னரான சூழலில் டெங்கு பரவல் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. அதனால் யாழ். மாநகர சபை ஆணையாளர் நகர மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பொருத்தமான பொறிமுறையூடாக நுளம்பு பெருகாது தடுப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக காணிகளில் காணப்படும் வெற்றுக்கலன்களைச் சேகரித்து உரிய வகையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சகல பிரதேச செயலாளர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன் முன்னேற்ற அறிக்கையை 16 ஆம் திகதி அனுப்பி வைக்குமாறும் பிரதேச செயலர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை விமானப்படையால் உதவிகள்

(பழுவூரான்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் இலங்கை விமானப் படையால் சமைத்த உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சவாலான சூழ்நிலையில் உள்ள மக்களுக்கு மிகவும் தேவையான நிவாரணப் பொருள்களை பாதிக்கப்பட்ட பகுதிகளான சேத்துக்குடா, வீச்சுக்கல்முனை மற்றும் கன்னன்குடா ஆகிய பகுதிகளில் வழங்கினர்.

அத்தோடு கடுமையாகப் பாதிக்கப்பட்ட கன்னன்குடாப் பகுதியிலுள்ள பெண்களுக்காக 180 சானிட்டரி பேக்குகள் விநியோகிக்கப்பட்டன. உலர் உணவு பொதிகளும் கன்னங்குடா பகுதியில் உள்ள 160 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அத்தோடு 400 சானிட்டரி பேட்கள் கன்னங்குடா கிராம உத்தியோகத்தரிடம் தகுந்த முறையில் விநியோகம் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டன.

உலர் உணவுகள் மற்றும் சுகாதாரப் பொதிகள் உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் நன்கொடையாளர்களான ஸ்ரீ லங்கா அறக்கட்டளை மற்றும் வண. கட்டானே தம்மரக்கித தேரோ ஆகியோரின் ஆதரவின் மூலம் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.





# நாட்டில் சீரற்ற காலநிலையால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்!

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையுடன் வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, காலி, களுத்துறை, அம்பாறை, குருநாகல், கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளன என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் சுமார் பத்தாயிரம் எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

120 முதல் 200 பேர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒப்புதல் வாக்குமூலம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான கேள்விக்கு கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மிக அலட்சியமாகவும் அதிகாரத் திமிரோடும் பதில் அளித்துள்ளர். வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியுள்ளார்.

“போர் முடிவடைந்து 15 ஆண்டுகளா கின்றன. எனவே காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் இனியும் வருவார்கள் என்று நம்ப முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள்தான். இதில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இருக்கின்றனர். தமது பிள்ளைகளை ஒரு சில அதிகாரிகளிடம் ஒப்படைத்த மக்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட் கின்றனர். இதன் பின்னணியை தேடிப் பார்க்கும் போது, அங்கும் முந்தைய ஆட்சி யாளர்கள் உள்ளனர்.” – என்று கூறுகின்றார்.

இந்தக் கூற்றின் மூலம் அவர் இரண்டு விடயங்களை தம்மை அறியாமலேயே ஒப்புக்கொள்கின்றார்.

ஒன்று – யுத்தத்தின் போது ‘வலிந்து’ காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இருக்கின் றார்கள்.

அடுத்தது – அந்தப் பின்னணியில் முந்தைய ஆட்சியாளர்கள் உள்ளனர்.

அவர் கருத்தை அப்படியே ஏற்றுக் கொண் டாலும் கூட, அவர் குறிப்பிடும் காணாமல் போனவர்கள் யுத்த முனையில் அரச படைக ளிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். அவர் குறிப்பிடும் முந்திய ஆட்சியாளர்கள் யுத்தம் முனையில் மேற்படி காணாமல் போனவர்களை நேரடி யாக வந்து தாம் பொறுப்பேற்கவில்லை. பொறுப்பேற்றவர்கள் படையினர். அவர்கள் மேற்படி தமிழ் மக்களை காணாமல் போகச் செய்யும் நடவடிக்கையில் முன்னைய ஆட்சி யாளர்களோடு சேர்ந்து செயல்பட்டு இருந்தால் மட்டுமே அவர்களிடம் ஒப்படைக் கப்பட்டவர்கள் காணாமல் போகச் செய்யப் பட்டிருக்க முடியும்.

அந்த விடயத்தை விசாரித்து, உண்மையை கண்டுபிடிங்கள், அந்த உண்மைகளின் அடிப்படையில் நீதியை நிலைநாட்டி, பொறுப் புக் கூறலை நடைமுறைப்படுத்துங்கள் என்பதுதான் தமிழர் தரப்பில் ஒரே கோரிக் கையாக இருந்து வருகிறது.

காணாமல் போக செய்யப்பட்டவர்களின் பிரச்சினையில் முந்தைய ஆட்சியாளர்களின் நேரடித் தொடர்பையும், அவர்களோடு சம் பந்தப்பட்ட படைத்தரப்பையும் பாதுகாப்பதற் காகவே இந்த நீண்ட கால ஒளிவு மறைவு அட்டகாசம் – சிங்களத்தின் பிடிவாதம் – என்பது தமிழர் தரப்பின் ஒரே குற்றச்சாட்டாக இருந்து வருகிறது.

தெரிந்தோ, தெரியாமலோ அந்த உண்மையை அமைச்சர் சந்திரசேகரன் தமது வாயாலேயே ஒப்புக் கொண்டிருக் கின்றார். ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக் கின்றார்.

அவரது கருத்தின் மூலம் வெளிப்பட்டுள்ள இரண்டு விடயங்களை அரசாங்கம் பின்பற்றித் தொடர வேண்டும் என்பதுதான் இப்போது தமிழர்களின் வலியுறுத்தல்.

ஒன்று – கடந்து வந்த அரசாங்கங்கள் யுத்தத்தின் போது தமிழர்கள் ‘காணாமல் போனார்கள்’ என்ற பதத்தை பயன் படுத்துகின்றதே தவிர ‘வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள்’ என்பதை ஒப்புக்கொள்ள வில்லை. அதனை சந்திரசேகரன் ஏற்றுக் கொள்கிறார்.

அடுத்தது – இப்படி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்த இரண்டு விடயங்களின் அடிப் படையில், நீதி,நியாயமான விசாரணைகளை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, சட்டத்தையும் பொறுப்புக் கூறலையும் நிலைநாட்டி, அதன் அடிப்படையில் மீள நிகழாமையை உறுதிப் படுத்தி, இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்பதே தமிழர் தரப்பினதும் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலினதும் ஏக கோரிக்கையாக இருந்து வருகிறது.

காணாமல் போனோர் உயிருடன் இல்லை என்ற கருத்தை மட்டும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல கூறித் தப்பிவிட முயன்ற அமைச்சர் சந்திரசேகரன், அத னோடு இரண்டு விடயங்களை ஒப்புக் கொண் டிருப்பது முக்கிய அம்சமாகும்.

அவர் குறிப்பிட்டமை போல வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையையும், அதில் முந்தைய ஆட்சியாளர்கள் படையினருடனும் சேர்ந்து தொடர்புபட்ட விடயங்களையும் நீதி முறையில் விசாரித்து, உண்மையை கண்டறிய புதிய ஆட்சி பீடம் தயார் என்றால், நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இழுபடும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சி னைக்குத் தீர்வு கண்டுவிட முடியும்.

# கல்முனைக்கு ஏற்படபோகும் இழப்புக்களை ஹக்கீமும், மு.காவுமே பொறுப்பேற்க வேண்டும்

## மு.கா முக்கியஸ்தர் சத்தார் தெரிவிப்பு

(மாளிகைக்காடு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பில் நாடாளுமன்றில் குரலெழுப்பினார்.

ஆனால் அங்கு நியாயபூர்வமான முஸ்லிங்களின் பக்க நியாயத்தையும், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் உண்மைத் தன்மையையும் எடுத்து கூற முஸ்லிம்களின் தரப்பில் யாருமில்லாத நிலை இருந்தது கவலையளிக்கிறது.

இதனால் ஏற்படபோகும் விளைவுகளுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும், மு.கா. தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.சி.ஏ. சத்தார் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த காலங்களில் இந்த பிரச்சினையை திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் இராஜதந்திரமான முறையில்



கையாண்டு முஸ்லிங்களுக்கோ, கல்முனை மக்களுக்கோ அவர்களின் சொத்துக்களுக்கோ அல்லது உடமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படாத வகையில் செயற்பட்டு வந்தார்.

அவரை இந்த முறை நடைபெற்ற பொதுத்தேர்தலில் களமிறங்காத வகையில் மு.கா. தலைமைத்துவம் திட்டமிட்டு தடுத்தது. சாணக்கியன் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் இலகுவாக இந்த விடயத்தை கையளவே என்ற கதையாடல் அம்பாறையில் பேசுபொருளாக தொடர்ந்தும் இருந்து வருகிறது.

மட்டுமில்லாது ஹரீஸ் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தொடர்பில் கையாளப்பட்ட வழக்கின் போதும் எவ்வித ஆதரவும் வழங்காது இருந்த மு.கா. தலைமைத்துவமும், இந்த வழக்கின் பாரதூரத்தை மக்களுக்கு குறைத்து பேசி எள்ளி நகையாடிய மு.கா. செயலாளரும், இந்த விடயத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் மு.கா. பிரமுகர்கள் தமிழ் அரசியல்வாதிகளுக்கு சார்பான நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றனர்.

கல்முனை விடயத்தை பொறுப்புணர்வுடன் கையாண்டவரை அந்த இடத்தில் இருந்து அகற்றி கல்முனை நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்தமையானது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகும். அதனை மெய்ப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கல்முனை வடக்கு உப பிரதேச செயலக விடயத்தை இரண்டாவது அமர்விலையே உரத்து பேச ஆரம்பித்திருக்கிறார்.

இதனூடாக கல்முனை மண்ணுக்கு ஏதாவது அநியாயங்கள் நடைபெறுமாக இருந்தால் அதன் முழுப்பெறுப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமுமே பொறுப்பேற்க வேண்டும்.-என்றார்.

# அரச வைத்தியசாலைக் கட்டமைப்பால் தரமற்ற மருந்து வழங்கப்படவில்லை!

## அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

அரச வைத்தியசாலைக் கட்டமைப்பால் வழங்கப்படவில்லை என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகள் தொடர்பாக நேற்று முன்தினம் (05) ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து நேற்று (06) நாடாளுமன்ற அமர்வில் எதிர்க்கட்சியின் பிரதான இணைப்பாளர் கயந்த கருணாதிலக முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

அரச வைத்தியசாலைகளுக்கு 500 தரமற்ற மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் பொய்யானது. தவறான செய்திகளை சமூகமயப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கிறோம்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட மருந்துகள்தான் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை ஊடாக விநியோகிக்கப்படுகின்றன.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் வினைத்திறனற்ற நிலை காணப்படுகின்றது. தற்காலிக மற்றும் நிரந்தரப் பதிவுகள் தற்போது விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன.

500 தரமற்ற மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்படுகிறது, ஆனால் அது எவ்வகையான மருந்துகள் என்று வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. ஆகவே தாம் பெற்றுக் கொள்ளும் மருந்து தரமற்றதா என்று பொது மக்கள் சந்தேகம் கொள்ள நேரிடும்.

ஆனால் அவ்வாறு கூறும் விதமாக தரமற்ற மருந்துகள் அரச வைத்தியசாலைக் கட்டமைப்பின் ஊடாக செல்லவில்லை. தரத்தின் தன்மை தொடர்பாக பிரச்சினை இருப்பின் அது அறிவிக்கப்படும்.

இது தொடர்பாக எதிர்காலத்தில் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பார் என்று அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெளிவுபடுத்தினார்.




### 3 மில்லியன் ரூபா பெறுமதியான

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைதான நபருக்குப் பிணை!

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 3 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நபரொருவர் இன்று (07) பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம், பொத்தனேகம பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய முன்னாள் விமானப்படை விமானியான சந்தேக நபர், இன்று அதிகாலை 12:35 மணியளவில் 'பிற்ஸ் எயார்' விமானத்தில் டுபாயிலிருந்து இலங்கை திரும்பியிருந்தார்.

கைது செய்யப்பட்ட நபர் வேலை தேடி சுற்றுலா விசாவில் டுபாய் சென்றிருந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள், குறித்த நபரின் வீட்டில் இரண்டு பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 ஆயிரம் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகள் அடங்கிய மொத்தம் 100 அட்டைப் பெட்டிகளை மீட்டுள்ளனர்.

சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்தல், கடத்தல் மற்றும் சிகரெட்டுகளை வைத்திருந்தமை ஆகிய குற்றச் சாட்டுகளுக்காக டிசெம்பர் 18 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 55 மில்லியன் ரூபா மோசடி:

# குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் வைத்தியர்

தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப் பாளராகக் கடமையாற்றிய வைத்தியர் ஒருவர் ஐம்பத்தைந்து மில்லியன் ரூபாவை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொனஹேன, பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதுடைய வைத்தியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் பொது முறைப்பாடு பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.





# கம்பஹாவில் கொல்லப்பட்ட சிறுமி: விசாரணையில் திடுக்கிடும் தகவல்!

கம்பஹாவில் சிறுமி கொலை செய்யப்பட்டு, நிர்மாணிக்கப்பட்டு வரும் கழிவறை குழியில் சடலத்தை வீசிய சம்பவம் தொடர்பான பல உண்மைகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி, 14 வயதுடைய தனது மகளை காணவில்லை என தாய் ஒருவர் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணையை தொடங்கிய பொலிஸார் கொலைக்கான மூல காரணத்தை கண்டுபிடித்தனர்.

முறைப்பாட்டாளரான தாய், தனது இரண்டாவது கணவர் மற்றும் மகளுடன், மாகேவிட்ட பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வேறு ஒருவருக்கு சொந்தமான மூன்று மாடி வீட்டில் தற்காலிகமாக வசித்து வந்தார்.

கடந்த 2ஆம் திகதியன்று கணவனும் மகளும் வீட்டில் இருந்தபோது, காலையில் வேலைக்குச் சென்றுவிட்டு இரவு வீடு திரும்பிய பெண் தன் மகள் வீட்டில் இல்லாதது குறித்து விசாரித்துள்ளார்.

நண்பரின் குடும்ப உறுப்பினர்களுடன் மகள் சுற்றுலா சென்றிருப்பதாகவும், மறுநாள் வருவதாகவும் மனைவியிடம் தெரிவித்துள்ளார்.

5 ஆம் திகதிவரை மகள் வீட்டுக்கு வராததால் இருவருக்கும் தகராறு ஏற்பட்டு, பின்னர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அங்கு சிறுமி காணாமல் போனது குறித்து தனது கணவர் மீது சந்தேகம் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் முறைப்பாட்டாளரின் 42 வயதுடைய கணவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

2 ஆம் திகதியன்று கணவன் அடகு வைத்த தங்க நகையை மீட்க மகளிடம் பணத்தை கொடுத்துவிட்டு, அந்த தங்க நகையை விடுவிக்க தந்தையுடன் செல்லுமாறு கூறிவிட்டு மனைவி வேலைக்கு சென்றுள்ளார்.

போதைக்கு அடிமையான இவர், மகளிடம் நகையை அடகு எடுப்பதற்காக கொடுத்த பணத்தை கேட்டுள்ளார். மகள் மறுத்ததால், மகளை தாக்கி, பணத்தை பணத்தை பறித்துக் கொண்டு, வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

வீட்டுக்கு வந்த அவர், மகள் அடித்த இடத்திலேயே இறந்து கிடப்பதைக் கண்டுள்ளார். இந்த நிலையில் சிறுமியின் சடலத்தைப் பைக்குள் மூடி, கட்டுமானத்தில் உள்ள வீட்டின் கழிப்பறை குழியில் வீசியதாக விசாரணையில் தெரிவித் துள்ளார்.

கிடைத்த தகவலின் அடிப்படையில், கம்பஹா நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, கழிவறை குழியில் கிடந்த மகளின் சடலம் எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று கம்பஹா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிசி விநியோகத்தில் குளறுபடிகள் நுகர்வோர் அதிகாரசபை விசாரணை

காலாவதியான அரிசி கையிருப்புகளை ஏற்றுமதி செய்தல் மற்றும் அவற்றின் திகதிகளை மாற்றி சந்தைக்கு விடுவிப்பது தொடர்பாக நுகர்வோர் அதிகாரசபை விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான அரிசியின் திகதிகளை மாற்றி சந்தைக்கு விடுகின்ற கடத்தல்காரர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அரிசி தட்டுப்பாட்டுடன் இவ்வாறான செயற்படுகள் காரணமாக அப்பாவி நுகர்வோர் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால்இ அரிசிக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்படும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீண்டகால வேலைத் திட்டத்தை தயாரிப்பது அரசின் பொறுப்பாகும் என சங்கத்தின் தவிசாளர் யு. கே. சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.




# பிரதான நீர்க்குழாய்த் திருத்தம் பூர்த்தி! நீர் விநியோகம் வழமைக்கு திரும்பும்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் உடைத்தெறியப்பட்ட பிரதான நீர்க் குழாய்களின் முக்கிய திருத்த வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த பன்னிரண்டு நாள்களாக நயினாகாட்டுப் பகுதியில் பிரதான குழாய்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் இரவு பகலாக திருத்தம் செய்யப்பட்டு வந்தது.

இன்று (07) சனிக்கிழமை பகல் குறித்த குழாய்கள் திருத்திப் பொருத்தும் பணி நிறைவு பெற்றுள்ளன.

குழாய்கள் எதிர்வரும் வெள்ள அனர்த்தத்தின்போது சேதமடையாமல் இருக்க உரிய தடுப்பு அணைகள் போடப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஹைதர்அலி, பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் வினாயகமூர்த்தி உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் நேற்றும் களத்தில் நின்று இறுதிக்கட்ட பணிகளில் ஈடுபட்டனர்.

கடந்த 12 நாள்களாகத் தண்ணீர் இன்றி 28 கிலோ மீற்றர் நீளமுள்ள பிரதான குழாய்கள் இருந்தன. அவற்றில் முதலாவது தண்ணீர் ஏற்றி பரிசோதிக்கும் சோதனை நிகழ்வும் இடம்பெற்றது.

அனைத்தும் பூர்த்தியாகும் பட்சத்தில் நாளை (08) ஞாயிற்றுக்கிழமை குடி தண்ணீர் விநியோகம் வழமைபோல் இடம்பெறலாமென கூறப்படுகிறது.

கடந்த 12 நாள்களாக நிந்தவூர் காரைதீவு மாளிகைக்காடு சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் குழாய் நீர் விநியோகம் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

குறிப்பாக காரைதீவுக் கிராமத்துக்குக் குழாய் நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் நியமனம்!


(அபு அலா)


கிழக்கு மாகாண அமைச்சுக்களுக்குப் புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவால் நேற்று (06) வழங்கி வைக்கப்பட்டன.

அதற்கமைவாக, விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எம்.எம்.நஸீர் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றி வந்த இஷட்.ஏ.எம்.பைஷல் முதலமைச்சின் செயலாளராகவும், ஆளுநர் செயலக செயலாளராக கடமையாற்றி வந்த எல்.பி.மதநாயக்க சுகாதார அமைச்சின் செயலாளராகவும், கல்வி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்க விவசாய அமைச்சின் செயலாளராகவும், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையற்றி வந்த எம்.கோபாலரத்ணம் பேரவைச் செயலாளராகவும், கல்முனை பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ஜே.லியாக்கத்தலி மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையில் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் போன்ற பதவிகளுக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

புதிய அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டவர்களை எதிர்வரும் திங்கட்கிழமை (09) தங்கள் அமைச்சுக்களின் கடமைகளை பொறுப்பேற்கும்படி சகல செயலாளர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பணிப்புரை விடுத்துள்ளார்.




# முள்ளி வாய்க்கால் பேரவலச் சாட்சியான மருத்துவர் வரதராஜாவின் நூல் வெளியீடு!

## நாளை ஆஸ்திரேலிய சிட்னியில்

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

தமிழினப் படுகொலையின் சாட்சியும், 2009 வன்னி போர்க்களத்தில் இறுதிவரை பணியாற்றிய மருத்துவர்களில் ஒருவருமான மருத்துவர் வரதராஜாவின் “Untold Truth Of Tamil Genocide” நாளை (08) சிட்னியில் பிளாக் டவுண் நகர நூலக மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

‘தமிழினப் படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்’ எனும் வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் ஆஸ்திரேலியாவில் அடிலெய்ட், மெல்பேர்ண் நகர்களில் ஏற்கனவே வெளியாகி உள்ளது.

இறுதிப் போரில் தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவரை மதிப்பளிக்கும் வண்ணம் நாளை (08) ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் புத்தக வெளியீடும் நேரடி சந்திப்பு கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

சர்வதேசம் எங்கும் ஈழத்தமிழர்களின் பலத்த ஆதரவுடன் வெளியிடப்பட்ட வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாறு நூல் ஆங்கில மொழியில் ரஜீ பட்டீசன் எழுதிய “தமிழினப்படுகொலையின் சொல்லப்படாத உண்மைகள்” என்பது ஈழத் தமிழர்களின் துயரமான வரலாற்றையும், அவர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்களையும் ஆவணமாக்கும் ஒரு முக்கியமான நூலாகும்.

பேரவலம் நிகழ்ந்த முள்ளிவாய்க்காலின் இறுதி நாள்களில் நடந்த இன அழிப்பு நிகழ்வுகளையும், அதன் மையத்தில் நின்று ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களை காப்பாற்ற முயன்ற வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் தியாகத்தையும் இந்த நூல் ஈழத் தமிழர்களின் தனித்துவமான கலாசாரத்தையும், அவர்களின் அடையாளங்களையும் அழிக்க நடத்தப்பட்ட சதியை முழுமையாக வெளிக்கொண்டு வருகிறது. ஏராளமான பல்லின அரசியல் சூழ்நிலைகளின் விளைவாக ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைகள், பங்காளித்துவம், மற்றும் சுயாட்சி ஆகியவற்றுக்காக எப்படி போராடினார்கள் என்பதையும் இந்த நூல் எடுத்துக் கூறுகிறது.

இதுவரை மறைக்கப்பட்ட வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு சொல்லித் தரும் முயற்சியாக இந்த நூல் திகழ்கிறது. இது வரலாற்றை மறக்காமல் அதன் பாடங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளுமாறு இளைய தலைமுறையினருக்கு புகட்டும் ஒரு படைப்பாக இது விளங்குகிறது. ஈழத் தமிழர்களின் துயர அனுபவங்கள், அவர்களது எதிர்கால சுதந்திரத்துக்கான போராட்டத்துக்கு அடித்தளமாக அமைந்தன என்பதையும், எந்த சூழலிலும் மனிதநேயத்தை உயர்த்தி நிறுத்தும் பொறுப்பை உணர்த்துகிறது.

வைத்தியர் துரைராஜா வரதராஜா ஈழத் தமிழர்களின் உண்மையான மனிதநேய வைத்தியராக திகழ்கிறார். அவர் காட்டிய தியாகம், உலகமெங்கும் தமிழ் இனத்தின் எதிர்காலத்துக்கு நம்பிக்கை மற்றும் நீதி தேடும் சான்றாக உள்ளது. ஆங்கில பதிப்பு மூலம் இந்த நூல், ஈழத் தமிழர்களின் துயர வரலாற்றை உலகளாவிய அரங்கில் கொண்டு சேர்க்கும் ஓர் அரிய முயற்சியாக திகழ்கிறது.

தாயக மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பேரவலத்தின் போது மகத்தான சேவையாற்றிய மருத்துவருக்கு மதிப்பளிக்க இந்த நிகழ்வை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ஒழுங்கமைத்துள்ளது.



# அடுத்த 12 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு

## இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

அடுத்த 12 மணி நேரத்தில் தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகவாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து எதிர்வரும் 12ஆம் திகதி தென்மேற்கு வங்கக்கடலில் தமிழ்நாடு இலங்கை கடலோர பகுதிகளை அடைய கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இன்று முதல் 12ம் திகதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரும் 11, 12-ஆகிய தேதிகளில் கடலூர் தொடங்கி ராமநாதபுரம் வரை உள்ள கடலோர மாவட்டங்களிலும்,, புதுச்சேரி, காரைக்காலிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் மாலை மற்றும் இரவு நேரங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேங்கி நிற்கிற நிலையில் வி.சி.க. இல்லை; விஜய்யின் கருத்துக்கு திருமாவளவன் பதில்

"விஜய்யின் மனது மேடையில் இல்லை. என்னை நோக்கியே இருந்திருக்கிறது. புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள வேண்டாம் என்பது நான் சுதந்திரமாக எடுத்த முடிவு."

– இவ்வாறு வி.சி.க. தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் வி.சி.க. தலைவர் திருமாவளவன் இன்று சனிக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது நேற்று நடந்த புத்தக வெளியீட்டு நிகழ்வில், 'திருமாவளவன் மனது முழுக்க முழுக்க எங்களோடு தான் இருக்கும்' என்று த.வெ.க. தலைவர் விஜய் பேசியது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிகையில்,

"விஜய்யின் மனது மேடையில் இல்லை. என்னை நோக்கியே இருந்திருக்கிறது என்பதை மட்டும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர் மேடையில் இருந்தாலும், நான் எங்கே இருக்கிறேன் என்பதை எண்ணிக்கொண்டே இருக்கிறார். அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ளவில்லை என்பதில் அவருக்கு வருத்தம். ஓர் ஆதங்கம், அதனால் அவர் அவ்வாறு பேசியிருக்கிறார். மற்றபடி எனக்கு எந்த நெருடலும் இல்லை.

விழாவில் கலந்துகொள்ள வேண்டாம் என்பது நான் சுதந்திரமாக எடுத்த முடிவு. கட்சியின் நலன், கூட்டணியின் நலன் கருதி சனாதன சக்திகளின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் இருக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு எடுத்த முடிவு. இந்த விழாவில் நான் பங்கேற்க இயலாமல் போனதற்கு, தவெக தலைவர் விஜய் கூறுவது போல எந்த அழுத்தமும்,



காரணமும் இல்லை. நான் சுதந்திரமாக எடுத்த முடிவு. தொடக்கத்திலேயே பதிப்பகத்தாரிடம் இதுகுறித்து விளக்கி கூறியிருக்கிறேன்.

விஜய்யும் நானும் ஒரே மேடையில் நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்கிற சூழல் இருந்தால், இதை வைத்து அரசியல் செய்யக்கூடிய சிலர், அல்லது அதற்கான செயல்திட்டத்தை வகுத்துக் காத்துக்கொண்டிருக்கிற சிலர், திரிபுவாதம் செய்வதற்கும், திசை திருப்புவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதற்கு இடம் தரக்கூடாது என்ற அடிப்படையில் ஒரு தொலைநோக்குப் பார்வையோடுதான் இந்த முடிவை எடுப்பதாக விளக்கி கூறியிருந்தேன்.

விஜய் குறிப்பிடுவது போல தி.மு.கவோ, அதன் தலைமையிலான கூட்டணிக் கட்சிகளோ, எனக்கு எந்த அழுத்தமும் தரவில்லை. அவ்வாறு அழுத்தத்துக்குப் பணிந்து, இணங்கி முடிவெடுக்க முடியாமல் தேங்கி நிற்கிற நிலையில் வி.சி.கவும் நானும் இல்லை." – என்றார்.





# அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 20 பேர் பலி

காசாவின் மத்திய பகுதியில் உள்ள நுசிராத் அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காசாவின் வடக்கு பகுதியில் உள்ள இரண்டு வைத்திய சாலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 29 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களில், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.





# 2,350 சதுரக் கி.மீ. நிலப்பரப்பை மீண்டும் கைப்பற்றியது ரஷ்யா

குளிர்கால பருவநிலை ஆரம்பித்துள்ள போதிலும் ரஷ்ய இராணுவம் உக்ரைனில் தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை உக்ரைனின் கிழக்குப் பகுதியிலும் தெற்கு குர்ஸ்க் பகுதியிலும் 2,350 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை ரஷ்யா மீண்டும் கைப்பற்றியுள்ளது.

2022 பெப்ரவரி மாதம் போர் ஆரம்பமானதிலிருந்து கடந்த நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 45,680 பேர் ரஷ்யாவில் கொல்லப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள சமீபத்திய தகவல்களுக்கு அமைய நாளாந்தம் 1,523 பேர் உயிரிழப்பதுடன் பலர் காயமடைந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகக் கடந்த நவம்பர் 28 ஆம் திகதியன்று 2,000 பேர் ரஷ்யாவில் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.









பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 07/12/2024

## எயார் கனடா விமான சேவை விமானத்தில் பொதிகள் தொடர்பில் புதிய நடைமுறை

எயார் கனடா விமான சேவை நிறுவனம் விமானத்தில், கையில் சுமந்து செல்லும் பொதிகள் தொடர்பில் புதிய நடைமுறையை அறிமுகம் செய்ய உள்ளது.

இதன்படி எயார் கனடா விமான சேவை நிறுவனம் 02▶




# பிரம்டன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கனடாவின் பிரம்டனில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பிரம்டனின் கோர்வே ட்ரைவ் மற்றும் மேபீல்ட் வீதிகளுக்கு இடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 03▶



# மிஸ்ஸிசாகாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி

மிஸ்ஸிசாகாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

டக்ஸி வண்டியொன்று மின் கம்பம் ஒன்றில் மோதுண்ட காரணத்தினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மிஸ்ஸிசாகாவின் வுல்ப்டேல் மற்றும் சென்ட்றல் வீதி என்பனவற்றிற்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

25 வயதான நபர் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த வாகனத்தில் ஒருவர் பயணம் செய்துள்ளார் எனவும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த பகுதியில் கடுமையான வாகன நெரிசல் நிலைமை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டொனால்ட் ட்ரம்ப் 'வேடிக்கையான நபர்': ஒன்றாரியோ மாகாண முதல்வர் விமர்சனம்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வேடிக்கையான நபர் என ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் விமர்சனம் செய்துள்ளார்.


அண்மையில் நடைபெற்ற தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றியிட்டியிருந்தார். டக் போர்ட், ஜனாதிபதி ட்ரம்பை இழிவான முறையில் விமர்சனம் செய்துள்ளார்.



குறிப்பாக கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளின் ஏற்றுமதிகள் மீது 25 வீத வரி அறவீடு செய்யப் போவதாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

மேலும் சட்ட விரோத குடியேறிகள் தொடர்பிலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாக தெரிவித்திருந்தார்.

இவ்வாறான ஓர் பின்ன ணியில் டக் போர்ட் இந்த விமர்ச னத்தை வெளியிட்டுள்ளார்.




# கனடாவில் தேடப்பட்டு வரும் நபர்கள் தொடர்பில் பட்டியல்

கனடாவில் மிகவும் தேடப்பட்டு வரும் நபர்கள் தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் தேடப்பட்டு வரும் நபர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது.

ஐந்து பேர் இந்த பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. கனடா முழுவதும் தேடப்பட்டு வரும் 25 நபர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் 10 பேர் ரொறன்ரோ பெரும்பாக பகுதி பொலிஸாரினால் தேடப்பட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் கடத்தல் படுகொலை சம்பவங்கள் என பல்வேறு குற்ற செயல்களுடன் தொடர்புடையவர்களை இவ்வாறு தேடப்பட்டு வருகின்றனர்.இவ்வாறு தேடப்பட்டு வரும் பலர் தலைமறைவாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## எயார் கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் கையில் பொதிகளை சுமந்து செல்வதை தடை செய்வதற்கு திட்டமிட்டுள்ளது.

குறைந்த கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர்கள், ஆசனங்களை ஒதுக்கீடு செய்வதற்கு விசேட கட்டணம் ஒன்றை அறவீடு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

புத்தாண்டில் இந்த புதிய கட்டண நடைமுறை அமல்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் இந்த கட்டண அறவீட்டு முறைமை நடைமுறைக்கு கொண்டு வரப்பட உள்ளது.

இதன்படி பயணிகள் கையில் சுமந்து செல்லும் பயண பொதிகளுக்கும் கட்டணம் அறவீடு செய்யப்பட உள்ளது. பணப்பை, மடிக்கணினி போன்ற சிறிய பொருட்கள் கட்டணம் என்று எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட உள்ளது.





# இந்திய மாணவர் ஒருவர் கத்தியால் குத்திக்கொலை





கனடாவில் இந்திய மாணவர் ஒருவர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள Sarnia நகரில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு ஞாயிற்றுக் கிழமையன்று பொலிஸார் அழைக்கப் பட்டுள்ளனர்.

அவர்கள் அந்த வீட்டுக்குச் சென்ற போது, அங்கு ஒரு இளைஞர் கத்தியால் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

மருத்துவர்கள் அவரை பரிசோதித்த போது, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என தெரியவந்துள்ளது.

கடந்த செவ்வாயன்று அந்த இளைஞரின் உடற்கூறு ஆய்வுகள் முடிவடைந்த நிலையில், அவரது பெயர் குராசிஸ் சிங் (வயது 22) என்றும், அவர் இந்தியாவிலிருந்து கல்வி கற்பதற்காக கனடாவுக்கு வந்தவர் என்பதும், Lambton கல்லூரியில் அவர் படித்துவந்தார் என்பதும் தெரியவந்தது.

சிங்கை கொலை செய்ததாக, அவருடன் தங்கியிருந்த கிராஸ்லீ ஹண்டர் (வயது 36) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டின் சமையலறையில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், அது சண்டையாகி, ஹண்டர் சிங்கை கத்தியால் குத்தும் நிலைக்குச் சென்றுள்ளது.

பலமுறை கத்தியால் குத்தப்பட்ட சிங், சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகிவிட்டார்.

இதற்கிடையில், இது இனவெறுப்பு காரணமாக நடந்த கொலை அல்ல என்று கூறியுள்ள பொலிஸார் தொடர்ந்து அந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவருகிறார்கள்.

இந்நிலையில், இந்த துயர சம்பவம் தொடர்பில் புதிய தகவல்கள் சில வந்தவண்ணம் உள்ளன.

அதாவது, இந்த செய்தி வெளியானதைத் தொடர்ந்து, குராசிஸ் சிங் படிக்கும் Lambton கல்லூரிமீது பலர் புகார்கள் தெரிவித்துள்ளார்கள்.

சர்வதேச மாணவர்களிடம் எக்கச்சக்கமான கல்விக்கட்டணம் வசூலிக்கும் கல்லூரி, முதல் ஆண்டு மாணவரான குராசிஸ் சிங்குக்கு கல்லூரி வளாகத்தில் தங்க இடம் கொடுத்திருக்க வேண்டும் என்கிறார்கள் சிலர்.

அவர் எப்படி கல்லூரிக்கு வெளியே அறை ஒன்றில் தங்க அனுமதிக்கப்பட்டார் என கேள்வி எழுப்பியுள்ள சிலர், பணம் வாங்கிவிட்டு மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காத Lambton கல்லூரி, அதன் பலனை அனுபவிக்கத் தொடங்கியுள்ளது என்கிறார்கள் அவர்கள்.

## பிரம்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் படுகாயமடைந்த நிலையில் இருந்தார் எனவும் அவரது உயிரை காப்பாற்ற மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றுமொரு நபருக்கு கையில் துப்பாக்கிச் சூட்டு காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

